உ

சிவமயம்



# நயினாதீவு செம்மனத்தம்புலம்
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
# தோத்திரப் பதிகம்

ஆக்கியோன்:

திரு. க. வே. பரமலிங்கம் J. P. அவர்கள்

விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நயினாதீவு, செம்மனத்தம்புலம்

அருள்மிகு

# ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
# தோத்திரப் பதிகம்

ஆக்கியோன் :

திரு. க. வே. பரமலிங்கம், J. P. அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குருமணி அவர்களின்

# ஆசிச்செய்தி

நயினை செம்மனத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் பதிகம் என்னும் நூலை திரு. க வே. பரமலிங்கம், ஜே. பி. அவர்கள் வீரகத்தி விநாயகர் மீது கொண்ட பக்திப்பெருக்கு வெளிப்படும் வண்ணம் பெருமான் செய்தருளிய அற்புதச் செயல்களையும், திருவிளையாடல்களையும், அடியார்கட்கு வெளிவந்து காட்சிகொடுத்த சிறப்புகளையும் எடுத்துக்காட்டிப் பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார்கள்.

பாடல்கள் எவர்க்கும் விளங்கக்கூடியனவாயும், வீரகத்தி விநாயகர் வணக்கத்துக்குப் பொருந்தக்கூடியனவாயுமமைந்தவை.


வீரகத்தி விநாயகர் திருவருள் பெறவிரும்பிப் பாடிய திரு க. வே. பரமலிங்கம் அவர்கட்கு அவர் துன்பம் துடைத்து, திருவருள்பாலித்து, நலம் பெருகவேண்டுமென்று பெருமானை வணங்கி நல்லாசி கூறுகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## காப்பு — வெண்பா

முத்து மருப்பினனே முக்கணனார் புத்திரனே
இத்தரைக்கண் தீங்கனியை ஏற்றவனே — முத்தமிழால்
அன்புவைத்துப் பாட அடியேன் மனத்திருந்தே
இன்புவைத்துக் காப்பா யிரு.

## ஆசிரிய விருத்தம்

ஓங்கார ரூபனே உமையம்மை பாலனே
ஒப்பற் றவொரு தலைவனே
ஆங்கார மொழிப்பவா அசுரரை அழிப்பவா
அடிய வர்க்கருள் சுரப்பவா
நீங்காம லென்மனத் துள்ளிருந் திலங்கிடும்
நின்னை நானென் றென்றுமே
தூங்காமற் போற்றித் துதிக்கவே செய்குவாய்
சுந்தரத் தும்பி முகனே. — 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரத் தையனே யறுமுகற் கண்ணனே
அங்கயற்க ணம்மை மகனே
மங்கையர்க ளிருவருனை மகிழ்ந்துதின மணைப்பவா
மன்னுயிர் புரக்கு முதலே
எங்கிருந் தாலுநினை வேண்டிடிற் குறைகளை
எளிதினில் அகற்று வாயே
தங்குமுயர் செம்மனத் தம்புலப் பதியெனுந்
தலம்வதிந் தருள்வி நாயகா. — 2

கறையானை வடிவெடுத் தெமையாள வந்திட்ட
கருணை பொழியே ரம்பனே
மறைவான திருமுறைகள் நம்பியாண் டார்மூலம்
மக்களுக் களித்த வரனே
நிறைவாக என்னிதய கமலத்து எழுந்திருள்
நீக்க மறவெனை யாளுவாய்
உறைவாக(ச்) செம்மனத் தம்புலப் பதிமேவி
ஒளிர வேவரு விநாயகா — 3

முப்புரம தெரிசெய்த அச்சிவன் தந்தவா
மூஷிகமென் வாக னத்தோய்
அப்பமவல் பொரிகடலை விரும்பியே உண்பவா
ஆணவம் களையு மையா
செப்பிடும் நின்னையான் தினந்தொழுது நிற்கவே
தெய்வீக வாழ்வு தருவாய்
தப்பிதமொன் றில்லாமல் ஆண்டிடுக ஐயனே
தந்தைபுகழ் தந்தி முகனே, — 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்மகளென் வள்ளிதனை குமரவேள் மணம்செய்ய
மதயானை வடிவெ டுத்தாய்
தேன்துகளிற் செறிமலர்கள் மாலைபுனை மார்பனே
தெய்வமே ஞான ஒளியே
நான்படும் பாடுதான் பொழுதிலும் நாளிலும்
நன்று யறிந்தி ருப்பாய்
என்மனத் துன்பகல வடிவம தெடுத்திடாய்
இயம்புவாய் வேழ முகனே. — 5

இந்திரன் மலர்வனம் செழித்திட இறைஞ்சவே
ஏற்றுளக் கருணை கூர்ந்து
தந்திரக் காகமாய்க் குறுமுனிக் கலசநீர்
தட்டிக் கவிழ்த்து வைத்த
மந்திரத் துருவனே மறைபுகழும் முதல்வனே
மாண்பமையு மானை முகனே
சந்திரப் பிறையெனத் துலங்கிடும் மருப்பனே
தரணிமிசை அருளு வாயே. — 6

தந்தைதாய் உலகென்ன உணர்த்தவல மாய்வந்த
தனைய அங்குச பாசனே
சிந்தைகவர் பிரணவந் தந்தருளும் நாதனே
திருவருளை அள்ளி வாரிப்
பந்தவினை கொண்டுழலும் அடியேற்கு நல்கியே
பதமருள வேண்டு மையா
வந்தவினை தீர்த்திடும் ஐந்துகர வள்ளலே
மாநிலத் தினிது அருளே. — 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனுர்க் கொளிகாட்டும் நந்தியின் மைந்தனே
ஞானவடி வான முகனே
கந்தர்க்கு முந்தியே வந்திட்ட அண்ணலே
கருணைதந் தாளு மொருவா
உந்தனுக் குற்றபதி செம்மனத் தம்புலம்
உணர்ந்துநான் ஓடி வந்தேன்
எந்தனுக் கெந்நாளும் அருளீய வருகுவாய்
எழிலான அத்தி முகனே. — 8

பொய்யான தேகத்தை மெய்யென்று நம்பியே
பொழுதெலாம் பாது காத்து
செய்யாத செயலெலாம் செய்தனே அறிகிலேன்
சீர்பெறக் கருணை தருவாய்
மெய்யான தெய்வமே நின்னையான் போற்றுமல்
மேதினியில் வாழ்ந்து மூன்றேன்
ஒய்யார மெய்யனே ஓங்கார நாதனே
உண்மையாய் ஆளு வாயே — 9

கங்கைநதி அப்பனின் முடிகாணும் காவேரி
கழலிணைகள் கண்டு மகிழும்
இங்குமுடி யடியாகப் பேழைவயி றதுகாண
எமையாள வந்த குருவே
சங்கினொலி கடலினொலி வாயுவொலி ஓமெனச்
சாருசெவி கேட்கு தையா
தங்குநயி னைப்பதியி லிருதிருவும் வாழவே
தந்துகார்த் திடுக இனிதே. — 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

ஆதியென வேவந்த சிவசமயம் திருநீறு
அணிகொள்கண் டிகையும் வாழி
நீதிநெறி வழியதனில் ஆளுமுறை யதுவாழி
நிலைகற்பு மகளிர் வாழி
ஓதிமறை பூஜைபுரி ஒழுக்கமுள அந்தணர்கள்
உயர்ந்தஅடி யார்கள் வாழி
சோதிதரு மிரவிமதி வாழியருளோங்கரா
துதிக்கவே வாழி! வாழி!!

க. வே. பரமலிங்கம்

நயினாதீவு.
25 - 3 - 77



விபுலானந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org